முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1161

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.12.2022, சனிக்கிழமை

1. ஞானச் சுடரே அரங்கா
   ஞானிகள் பலம் கொண்ட தேசிகா
   தானதர்மத்தின் சக்தி மூலம்
   தரணி மாற்ற அவதரித்த குருராஜா
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17 ம் நாள் 03.12.2022, சனிக்கிழமை)
   வரமாக உன்னுள் யானிருந்து
   வையகத்தை காக்கும் சக்தியாக இயங்குகின்றேன்
3. ஆகவே அரங்கன் உன் சொல்செயல் அனைத்தும்
   அகிலத்தை மாற்றும் சித்தியாகும்
   ஜெகமக்கள் உன் வழி தொடர்ந்து வந்து
   சித்திகளை பெற்று உலக நலம் பெற
4. நலம் பெற நீ செய்து வருகின்ற
   ஞானமோடு அன்னதான சேவையை
   பலமாக மிகுதியாக்கி உலகமெங்கும்
   பரோபகார வித்தை விதைத்துவர
5. வருகவருக வையகத்தில் மாற்றம்
   வளர்ச்சி நிலைகளாகக் காணும்
   தருகின்ற குணங்கள் உலகமெங்கும் பரவி
   தயவான அரங்கன் நோக்கம் பூர்த்தியாகும்
6. ஆகவே அரங்க ஞானி ஆற்றலை
   அன்னதான பலமாக உலகமெங்கும்
   ஜெகமக்கள் சேவை மிகுதியாக்கி
   செய்து வரவரவே உலகமெங்கும்
7. உலகமெங்கும் ஞான ஆட்சிக்காலம்
   உயர்வாக மாற்றமாக நடந்தேறும்
   அரங்கன் வழி உலகோர் வரவர
   அற்புதத்தை நிகழ்த்தி ஆறுமுகன் யான் மாற்றம் செய்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–